**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**<u>அவசரக் கூட்ட நடவடிக்கைகள்</u>**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 12.11.2019 செவ்வாய் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை திரு.கே.அருள்முருகன்,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | இந்நகராட்சியின் நகர்மன்ற தீர்மானம் எண் 101 நாள் 31.10.2019-ன்படி விளம்பரங்கள்/ விளம்பர பலகைகள் அமைத்தல் (முறைப்படுத்துதல்) நிறுவ இடங்கள் தேர்வு செய்தல் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக முறைப்படுத்துதல் குழு கூட்டம் 12.11.2019ம் அன்று பிற்பகல் மூன்று மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். கீழ்க்கண்டுள்ள இடங்களில் விளம்பரங்கள். விளம்பரப் பலகைகள் அமைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.<br><br>1. புதிய பேருந்து நிலையம், திருத்துறைப்பூண்டி.<br>2. பழைய பேருந்து நிலைய நிழற்குடை, திருத்துறைப்பூண்டி. | 102 | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கண்டுள்ள இடங்களில் விளம்பரங்கள்/ விளம்பரப் பலகைகள் அமைத்துக்கொள்ள குழு உறுப்பினர்கள் தீர்மானித்தது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**(ந.க.எண். 3617/2014/எப்-1)** | | |

ஒம்/கே.அருள்முருகன்,
ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/

**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**<u>அவசரக் கூட்ட நடவடிக்கைகள்</u>**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 21.11.2019 வியாழக் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை திரு.கே.அருள்முருகன்,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | சொத்து வரியினை 01.04.2018 முதல் சீராய்வு செய்திட வெளியிடப்பட்ட அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018 ஆகியவைகளை நிறுத்திவைத்து, சொத்து வரி சீராய்விற்கு முந்தைய சொத்து வரியினையே வசூலித்திடவும், சொத்து வரி சீராய்வு குறித்து அரசு செயலாளர் நிதித் துறை அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின்பேரில் அரசாணை எண் 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை நாள் 19.11.2019 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | 103 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>பதிவு செய்யலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.11.2019ம் தேதிய சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1-ல் குறிப்பிட்டவாறு சொத்து வரி மண்டலங்கள் பகுப்பாய்வு (Zone Rate) மற்றும் 2017-18ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி மறு அளவீடுகள் (Under Assessed and Buildings with changes in usage) ஆகியவைகளையும் நிறுத்தி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 2547/2018/அ1)** | | |

ஒம்/கே.அருள்முருகன்,
ஆணையர்(கூ.பொ.) (ம)

தனி அலுவலர்,

திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/

**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 29.11.2019 வெள்ளிக் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை திரு.கே.அருள்முருகன்,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர்-2019 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | 104 | **பதிவு செய்யப்பட்டது** |
| 2 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் த.நா.50L-7339 டிப்பர் லாரி தகுதி சான்று பெற வேண்டி, வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்து தருவதற்கு அரசு அங்கீகாரம் பெற்றுள்ள ஆட்டோ ஒர்க்ஸ் ஷாப் நிறுவனத்திடமிருந்து 14.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது. | 105 | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது** |

| Description of works | Rate Quated by Annai Sathya Engineering Works | Rate Quated by Guru Auto Garage | Rate Quated by Dharmaraj Auto Garage |
|---|---|---|---|
| | **Amount Rs.** | **Amount Rs.** | **Amount Rs.** |
| Oil service, Engine oil & Replacement of Diesel filter, Oil filter | 7900 | 8000 | 7500 |
| Replacement of break complete four wheel overhall and lining work | 19500 | 19850 | 19000 |
| Clutch overhall & major repair | 8000 | 8200 | 8500 |
| Replacement of Hydralic pump assembly | 14800 | 15000 | 14000 |
| Replacement of all Air tubes | 6500 | 6300 | 6000 |
| Replacement of Air filter | 4000 | 4500 | 3800 |
| Replacement of Gear Rod mounting assembly | 2000 | 2150 | 1800 |
| Replacement of four wheel greese oil seal, Bearing | 6500 | 6000 | 6000 |
| Replacement of spring tempering and replacement of Pushpin | 19000 | 19450 | 18500 |
| Cable Tingering work | 3200 | 3000 | 3000 |
| Replacement of joint cross 3 Nos. | 4800 | 5000 | 4500 |
| Replacement of yoak | 6200 | 6500 | 6000 |
| Replacement of Play wheel & self motor overhall | 5300 | 5500 | 5500 |
| Wiring works | 2800 | 2200 | 2600 |
| Diesel pump leak fault attend and overhall works | 3600 | 3500 | 3500 |
| Body Tingering works | 11500 | 11800 | 10000 |
| Replacement of ceiling lock | 900 | 1000 | 800 |
| Replacement of seat covers | 2350 | 2500 | 2000 |
| Replacement of Grown | 21500 | 21800 | 20000 |
| Replacement of of oil seal | 1700 | 1600 | 1800 |
| Complete all painting and letter work | 12400 | 12650 | 12000 |
| **SUB TOTAL** | **164450** | **166500** | **156800** |
| **GST 18%** | **29610** | **29970** | **28080** |
| **TOTAL** | **194060** | **196470** | **184880** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>**1.** மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3-ல் கண்டுள்ள தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் திருவாரூர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.<br>**2.** மேற்படி வாகனப் பயன்பாட்டினை கருத்தில் கொண்டும் வாகனத்திற்கு தகுதி சான்று உடன் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிப்பெற்று திருவாரூர் தர்மராஜ் ஆட்டோ கேரேஜ், நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2934/2019/எச்-1)** | | |
| **3** | இந்நகராட்சிப் பகுதியில் தொற்று நோய்கள் பராவாமல் தடுத்திட பொதுமக்கள் நலன் கருதி டெங்கு தடுப்பு பணியாளர்கள் எண்ணிக்கை 21 நபர்கள் (300 வீட்டிற்கு ஒரு பணியாளர் என்ற அடிப்படையில்) பணியமர்த்தி பணி செய்திட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருவாரூர் நேரடி அறிவுரை வழங்கியதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண் 2571/2017/ஜெ1 நாள் 23.04.2018-ன்படி அனுமதித்துள்ளதால், நோய் தடுப்புபணியின் அவசர அவசியம் கருதி 01.04.2019 முதல் 31.03.2020 வரை ஓராண்டிற்கு 21 பணியாளர்களை அமர்த்தி டெங்கு மற்றும் இதர தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.18.00இலட்சம் ஆகும் . இச்செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. | **106** | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>1. அனுமதியளிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே டெங்க தடுப்பு பணியினை செய்து வந்துள்ள துய்மை இந்தியா மகளிர் சுய உதவிக்குழு மூலமாக 01.04.2019 முதல் டெங்கு தடுப்பு பணியினை தொடர்ந்து செய்து வந்துள்ளமைக்கு மாத ஊதியப் பட்டியல் வழங்கியுள்ளதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண்.1466/2018/எச்-1)** | | |
| **4.** | 2019 உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருப்பதையொட்டி இந்நகராட்சி மூலம் உள்ளாட்சி தேர்தல் தொடர்பான செலவினங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்<br><br>(ந.க.எண்.440/2019/அ1) | **107** | **அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/கே.அருள்முருகன்,
ஆணையர்(கூ.பொ.) (ம) தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/